இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**சாமர சம்பத் எதிர் இலங்கை பாராளுமன்றம்**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /719//2018- மேன்முறையீடானது 12.02.2019 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு -*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வல்கம

**பணிப்பாளர் நாயகம்:** திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** சாமர சம்பத்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பாராளுமன்றம்

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: சாமர சம்பத், ஊடகவியலாளர்
தரிந்து ஜயவர்தன, ஊடகவியலாளர்

பகிரங்க அதிகார சபை: டிகிரி கே ஜயதிலக்க, உதவி செயலாளர் நாயகம்
பி.கே.டி.எஸ்.டபிள்யு. விஜேகுணதிலக்க

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 21.06.2018 |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | 21.08.2018 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 30.08.2018 |

| | |
|---|---|
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | 07.09.2018 |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 11.09.2018 |

**சுருக்க நிகழ்வுப் பின்னணி**

21.06.2018 எனத் திகதியிடப்பட்டத் தகவல் கோரிக்கையொன்றினூடாக மேன்முறையீட்டாளர் கீழ்வரும் தகவல்களைக் கோரியிருந்தார்:

1. 2018 இல் தமது சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான பிரகடனத்தை கையளித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
2. 2010 ஆண்டு முதல் இன்றைய தினம் வரையில் தமது சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான பிரகடனத்தை கையளித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

இக்கோரிக்கைக்கு 21.08.2018 அன்று பதிலிறுத்த தகவல் அலுவலர் 1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்திற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகளின் பிரகடனம் தொடர்பான தகவல்களை சபாநாயகரிடமே பெற்றுக்கொள்ளவியலும் என குறிப்பிட்டிருந்தார். இப்பதிலில் அதிருப்தியுற்ற மேன்முறையீட்டாளர் 30.08.2018 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தார். 07.09.2018 அன்று பதிலிறுத்த குறித்தளிக்கப்பட்ட அலுவலர் தகவல் அலுவலர் அளித்த அதே பதிலினையே மீளவும் அளித்தார். மேலும், 1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 11 இற்கமைய வேறு ஏதேனும் சட்டங்கள் இச்சட்டத்துடன் முரண்படுகின்றபோது வேறு ஏதேனும் சட்டத்தினைவிட இச்சட்டம் மேலோங்குமென கூறுகின்றதெனவும் சுட்டிக்காட்டினார். குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் பதிலிலும் அதிருப்தியுற்ற மேன்முறையீட்டாளர் 11.09.2018 அன்று ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

தன்னுடைய தகவல் கோரிக்கையினூடாக புள்ளிவிபர தரவுகளையே கோரியுள்ளமையினால், அத்தரவுகளின் உள்ளடக்கங்கள் தொடர்பில் எதனையும் கோரவில்லையென்பதனாலும்

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளவியலும் என்ற நிலைப்பாட்டினை மேன்முறையீட்டாளர் கொண்டிருந்தார்.

இதற்கு பதிலிறுக்குமாக, பகிரங்க அதிகார சபை 05.02.2019 எனத் திகதியிடப்பட்ட அதன் எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களில் கூறப்பட்டிருந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி, கோரப்பட்ட குறிப்பிட்டத் தகவல் 1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் அதிகார எல்லைக்குள் உட்படுவதனால் அது தொடர்பான எக்கோரிக்கையும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சபாநாயகரிடமே செய்யப்படுதல் வேண்டும் என்பதனை மீள வலியுறுத்தியது. மேலும், கோரப்பட்டத் தகவல்கள் அல்லது அத்தகவல்கள் கோரப்பட்டுள்ள முறை சிலவேளைகளில் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறுவதாக அமையுமென்றும், மேன்முறையீட்டாளர் இக்கோரிக்கையினைத் தொடர்ந்து முன்னெடுக்க விரும்புவாராயின் 1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடபடிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் பகிரங்க அதிகார சபை குறிப்பிட்டிருந்தது.

இதற்கு பதிலிறுத்த மேன்முறையீட்டாளர், புள்ளிவிபரத் தரவுகளை வெளிப்படுத்தலானது பாராளுமன்றத்தின் அல்லது வேறு ஏதேனும் சபைகளின் நிலைப்பாட்டினை எவ்வகையிலும் பாதிக்காது என்று குறிப்பிட்டிருந்தார். இத்தகவல் கோரிக்கையின் மறுப்பு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் நியாயப்படுத்தப்பட வேண்டுமென்றும் மேன்முறையீட்டாளர் குறிப்பிட்டிருந்தார். இதற்கு பதிலிறுத்த பகிரங்க அதிகார சபை, பாராளுமன்றத்தின் நிர்வாகம் 'சபாநாயகரிற்கு வழிகாட்டல்களை வழங்குகின்ற'' நிலைப்பாட்டில் இல்லையென்று கூறியதுடன், குறிப்பிட்ட இச்சந்தர்ப்பத்தில் தகவலுக்கான உரிமைச் சட்டம் ஏற்புடையதாகாது என்பதனால் குறிப்பிட்டத் தகவல் கோரிக்கையினை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் நிராகரிப்பதற்கு அது மறுத்தது.

**ஆணை:**

ஒரு பகிரங்க அதிகார சபை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் கோரப்பட்ட ஏதேனும் தகவலை வழங்குவதற்கு மறுக்கின்றபோது அதனுடைய அத்தீர்மானத்தினை சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதிவிலக்குகளுள் ஏதேனுமொன்றை அடிப்படையாகக் கொண்டு நியாயப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மேன்முறையீட்டாளரினால் கோரப்பட்டத் தகவலை வழங்குதல் அல்லது நிராகரித்தல் தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கு முதலில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) இல் கூறப்பட்டிருப்பதற்கமைய குறிப்பிட்டத் தகவல் பகிரங்க அதிகார சபையின் உடைமையில், கட்டுக்காவலில் மற்றும் கட்டுப்பாட்டில் உள்ளதா என்பதனை நிச்சயிக்க வேண்டும். ஆகவே, சட்டத்தின் பிரிவு 3(1) தொடர்பான பகிரங்க அதிகார சபையின் நிலைப்பாட்டினை எழுத்துமூமான சமர்ப்பிப்புக்களினூடாக மேன்முறையீட்டாளருக்கான பிரதியொன்றுடன்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. அத்துடன் தகவலை நிராகரிப்பது என்று தீர்மானத்தினை பகிரங்க அதிகார சபை மேற்கொள்ளும்போது அதற்கான காரணங்களை சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் குறிப்பிட்டுகாட்டி அத்தீர்மானத்தினை நியாயப்படுத்த வேண்டுமெனவும் பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள் தொடர்பான ஆணைக்குழுவின் விதிகளில் (வர்த்தமானி இல. 2004/66, 03.02.2017) 27(3) ஆம் ஒழுங்குவிதிக்கு அமைய ஆணை இரு திறத்தவர்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென பணிக்கப்பட்டது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்படுகின்றது.

அடுத்த விளக்கத்திற்கான திகதி: 21.05.2019

***

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /719//2018- மேன்முறையீடானது 21.05.2019 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு -*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வல்கம

**மேன்முறையீட்டாளர்:** சாமர சம்பத்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பாராளுமன்றம்

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: சமூகமளிக்கவில்லை

பகிரங்க அதிகார சபை: டிகிரி கே ஜயதிலக்க, உதவி செயலாளர் நாயகம்
பி.கே.டி.எஸ்.டபிள்யு. விஜேகுணதிலக்க

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்:**

மேன்முறையீட்டாளர் வருகை தரவில்லை. 21.05.2019 எனத் திகதியிடப்பட்ட பகிரங்க அதிகார சபையின் எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்கள் பதிவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பகிரங்க அதிகார சபை ஆணைக்குழுவிற்கு வழங்கிய எழுத்துமூலமான சமர்ப்பிப்பில் அதன் கருத்துப்படி தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) இல் கூறப்பட்டிருப்பதற்கமைய குறிப்பிட்ட கோரப்பட்டத் தகவல் பகிரங்க அதிகார சபையின் உடைமையில், கட்டுக்காவலில் மற்றும் கட்டுப்பாட்டில் இல்லை என குறிப்பிட்டிருந்தது.

**ஆணை:**

இவ் ஆணை கிடைக்கப்பெற்று இரண்டு வார காலப்பகுதிக்குள் பகிரங்க அதிகார சபையின் எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களுக்கு பதிலிறுப்பதற்கான எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களை பதிவு செய்யும்படி மேன்முறையீட்டாளருக்கு பணிக்கப்பட்டது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்பட்டது.

---

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (ஆவண நடபடிமுறைகளினூடாக) /719//2018- மேன்முறையீடானது 25.06.2019 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு -*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வல்கம

**பணிப்பாளர் நாயகம்:** திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**மேன்முறையீட்டாளர்:** சாமர சம்பத்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பாராளுமன்றம்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்:**

கோரப்பட்டத் தகவலானது தன்னுடைய உடைமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில் இல்லை என்ற தனது நிலைப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக பகிரங்க அதிகார சபை மேற்கொண்ட சமர்ப்பிப்புக்களில் அது இரு சட்ட வாதங்களை எழுப்பியிருந்தது. அவையாவன:

1. இக்குறிப்பிட்ட கோரிக்கை தொடர்பாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரயோகத்திலுள்ள மட்டுப்பாடுகள்
2. சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலகங்களின் பணிகளுக்கிடையிலான வேறுபாடு

**இக்குறிப்பிட்ட கோரிக்கை தொடர்பாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரயோகத்திலுள்ள மட்டுப்பாடுகள்**

1975 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 4 என்பன ஒரேமாதிரியான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. இவ்விரண்டு ஏற்பாடுகளுமே இச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் வேறேதேனும் எழுதப்பட்டச் சட்டத்துடன் முரண்படுகின்றபோது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கும் என குறிப்பிடுகின்றன.

சட்டத்தின் பாயிரத்தினால் குறிப்பிடப்படுகின்றதற்கமைய, 1975 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டமானது குறிப்பிட்ட சில வகையான நபர்களுக்கு இலங்கைக்குள் மற்றும் வெளியே காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகளை காலத்திற்கு காலம் வெளிப்படுத்தவேண்டும் என்பதனை கட்டாயப்படுத்துகின்ற முதன்மைச் சட்டம் என்பதுடன், இச்சட்டமானது குறிப்பிட்ட சில நபர்களுக்கு மற்றும் ஏற்புடையதாவதனால் இது விசேட சட்டமாகவும் கருதப்படுகின்றது.

அவ்வகையில், பொருட்கோடல் விதிகளுக்கு அமைவாக, "*generally specialibus non derogant*" என்ற விதியில் உள்ளடங்கியுள்ள உட்கிடையான விதிவிலக்கானது பொதுவான நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் விசேட சட்டத்தின் ஏற்பாடுகளை விட மேலாங்காது என்ற கோட்பாட்டினை கூறுகின்றது. ஆகவே, சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 8(1) இன் கீழ் இரகசியத்தன்மையைப் பேண வேண்டிய விசேடக் கடப்பாடு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகார சபைகள் மீது விதிக்கப்பட்டுள்ள பொதுவானக் கடப்பாட்டினை விஞ்சி நிற்கின்றது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தமானது பகிரங்க அதிகாரச சபைகள் வைத்திருக்கின்றத் தகவல்களை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை ஒவ்வொரு பிரஜைக்கும் உத்தரவாதப்படுத்துகின்ற ஏற்பாட்டினை அறிமுகப்படுத்தியது. இவ் அடிப்படை உரிமையினை அமுல்படுத்துவதற்காகத்தான் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பாயிரமானது அரசியலமைப்பின் உறுப்புரை 14அ இற்கும் சட்டத்திற்குமிடையிலான நேரடி இணைப்பினை தெளிவாகக் கூறுகின்றது. ஆகவே, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தனித்து வாசிக்கப்படுதலோ அல்லது பொருட்கோடல் செய்யப்படுதலோ கூடாது. மாறாக, இதன் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் உறுப்புரை 14அ இனை அடிப்படையாகக் கொண்டு வாசிக்கப்படுதல் வேண்டும். உறுப்புரை 14அ (2) ஆனது இச்சட்டத்தின் பிரயோகத்திற்கான மட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளைக் குறிக்கின்றது.

மேலும், அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) ஆனது, ‘‘இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்’’ என கூறுகின்றது. இவ் ஏற்பாடானது உறுப்புரை 14அ மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை உறுப்புரை 16 இற்கு உட்பட்டதாக ஆக்குகின்றது.

சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டமானது 1975 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது என்பதுடன் இதன் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் உறுப்புரை 14அ மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டம் என்பனவற்றுடன் முரண்படுகின்றனவாகக் காணப்படுகின்றபோதிலும், மேலே குறிப்பிடப்பட்டவற்றை ஆராய்ந்து பார்க்கின்றபோது, சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் உறுப்புரை 16 இற்கு அமைய மேலோங்கும்.

அரசியலமைப்பின் உறுப்புரை 14அ (2) இற்கு அமைய தகவல்களை அணுகுவதற்கான பிரஜையின் உரிமையானது பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதற்காக மட்டுப்படுத்தப்படலாம். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 3(2) ஆனது இம்மட்டுப்பாட்டினை விளக்கி விரிவுபடுத்தியுள்ளது என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் நடைமுறைகளை மழுங்கடிப்பதாக அமைய கூடாது என கூறுகின்றது.

பாராளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டமானது அரசியலமைப்பின் உறுப்புரை 67 உடன் தொடர்புற்றுள்ளது. இவ் உறுப்புரையானது, ‘‘பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படலாம்: அத்துடன் அவ்வாறு தீர்மானித்து ஒழுங்குபடுத்தும் வரைக்கும் பாராளுமன்ற (தத்துவங்களும்

சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்'' என கூறுகின்றது. ஆகவே, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பு உத்தரவாதத்தினைக் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவையை பாராளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றுடன் இணைத்துப் பார்க்கின்றபோது அவை கோரப்பட்டத் தகவல்களை வெளியிடுவதற்கு செயலாளர் நாயகத்தினை அனுமதிக்காது. எவ்வாறெனினும், கோரப்பட்டத் தகவல்கள் தொடர்பான ஒரு உத்தியோகபூர்வ கோரிக்கையினை சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின்படி சபாநாயகருக்கு அனுப்பி அதனூடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேன்முறையீட்டாளர் உரித்துடையவராவார்.

**சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலகங்களின் பணிகளுக்கிடையிலான வேறுபாடு**

பாராளுமன்றத்தின் சபாநாகர் என்பவர் பாராளுமன்றத்தின் பிரதிநிதி, பேச்சாளர் மற்றும் பாராளுமன்றத்தின் இறுதி அதிகாரத்தினை உடையவர் ஆவார். பிரதமர் மற்றும் ஜனாதிபதியினைத் தொடர்ந்து சபாநாயகர் மூன்றாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய அதிகாரங்களை அரசியலமைப்பு, நிலையியற் கட்டளைகள், பாராளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம், பாராளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து பெற்றுக்கொள்கின்றார். பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான பாதுகாவலராகவும் காவலராகவுமுள்ள சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு பதில் கூற பொறுப்புடையவராயிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்.

அரசியலமைப்பின் உறுப்புரை 64 இற்கு அமைய, நிலையியற் கட்டளை 4 இற்கு அமைவாக பாராளுமன்றமானது சபாநாயகரைத் தெரிவு செய்ய வேண்டும். நிலையியற் கட்டளை 4 ஆனது இரகசிய வாக்கினூடாக சபாநாயகரைத் தெரிவு செய்கின்ற நடபடிமுறையினைக் கூறுகின்றது. நிலையியற் கட்டளை 143 இனூடாக அவருக்கு எஞ்சியிருக்கின்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையியற் கட்டளையானது பின்வருமாறு கூறுகின்றது:

''இந்நிலையியற் கட்டளைகளில் குறிப்பாக குறிப்பிடப்படாத ஒவ்வொரு விடயமும் மற்றும் இந்நிலையியற் கட்டளைகளின் விரிவான செயற்பாடுகள் தொடர்பாக எழுகின்ற ஒவ்வொரு வினாவும் காலத்திற்கு காலம் சபாநாயகர் பொருத்தமானதென கருதுகின்ற மற்றும் வழிநடத்துகின்ற முறையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்''

பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களினது கௌரவத்தினைப் பாதுகாக்க வேண்டியது மற்றும் பேண வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும்.

பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ பணியாளர்களின் தலைவராகிய செயலாளர் நாயகம் அரசியலமைப்பின் உறுப்புரை 41இ(1) மற்றும் 65 இற்கு அமைய அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார். உண்மையில், பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் முறையாகவும் நடாத்தவேண்டிய சுமை பாரியளவில் செயலாளர் நாயகத்தின் தோள்களிலேயே ஏற்றப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் பதவியானது அரசியலமைப்பினால் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரு சிறப்பான பதவியாகும் என்பதுடன் அவர் சபாநாயகரின் செயலாளர் அல்ல.

நிலையியற் கட்டளை 10 ஆனது பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் கடமைகளை கூறுகின்றது. அதன்படி, பாராளுமன்றத்தின் மற்றும் பாராளுமன்ற குழுக்களின் நடபடிமுறைகளின் நிகழ்வு குறிப்புக்களைப் பேணுதல் மற்றும் பாராளுமன்றத்தின் எதிர்கால பணிகளை மற்றும் குறிக்கப்பட்ட நாளொன்றில் அல்லது எதிர்காலத்தில் ஏதேனுமொரு நாளில் எடுக்கப்பட வேண்டிய வினாக்கள் தொடர்பான அறிவித்தல்கள் மற்றும் நகர்வு பத்திரங்களை காட்டுகின்ற கட்டளைப் புத்தகத்தினைத் தயாரித்தல் என்பன அவருடைய கடமைகளாகும். பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்வு குறிப்புக்கள், பதிவேடுகள், சட்டமூலங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பனவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு. குழுக்களின் நிர்வாக மற்றும் வள ஆதரவினை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பும் செயலாளர் நாயகத்திற்கு உண்டு.

பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் கௌரவத்திற்குரிய சபாநாயகருக்கு வழிகாட்டல்களை வழங்குகின்ற ஒரு நிலைப்பாட்டில் காணப்படுவதில்லை. மாறாக, பாராளுமன்றத்தின் பணிகளை ஆற்றுகின்றபோது சபாநாயகரின் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு பாராளுமன்றச் செயலகம் தேவைப்படுத்தப்படுகின்றது. ஆகவே, சபாநாயகர் அவருடைய கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் தகவலை வெளிப்படுத்துமாறு பணிப்பாராயின் அப்பணிப்பினை நிறைவேற்ற வேண்டிய கட்டாயப் பொறுப்பினை பாராளுமன்றச் செயலகம் கொண்டிருக்கும். எவ்வாறெனினும், சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகம் என்போர் தத்தம் பணிகளை சுயாதீனமாகவும் தனித்தனியாகவுமே மேற்கொண்டு வருகின்றனர்.

‘‘திவிநெகும’’ எனத் தலைப்பிடப்பட்ட சட்டமூலத்தின் மீதான உச்ச நீதிமன்றத்தின் 2012 ஆம் ஆண்டு தீர்மானம் தொடர்பாக தோற்றம்பெற்ற நிகழ்வுகள் இவ்விரண்டு பதவிகளுக்குமிடையிலுள்ள வேறுபாட்டினை உணரந்து கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பான கலந்துரையாடலுக்கு வழிவகுத்தது. இவ்விடயம் தொடர்பான பாராளுமன்றத்தின் நிலைப்பாட்டினை சபாநாயகர் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அன்று பின்வருமாறு கூறினார்:

‘‘*சபாநாயகர் பாராளுமன்றத்திலுள்ள அவரின் அதிகாரத்தினை அரசியலமைப்பின் உறுப்புரை 64(1) இலிருந்து பெற்றுக்கொள்கின்றார். அவர் பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு*

*செய்யப்பட்டவராவார். சபாநாயகர் முன்னுரிமை ஒழுங்கில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அடுத்த இடத்தைக் கொண்டுள்ளார். பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் அரசியலமைப்பின் உறுப்புரை 65(1) இற்கு அமைவாக ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார் என்பதுடன் நன்னடத்தை உள்ள வரையில் பதவியிலிருப்பார். இவ்விரண்டு பதவிகளும் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் நிலைப்பாட்டினை அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக சமப்படுத்த அல்லது ஒப்பிடப்பட முடியாதன ஆகும். மறு பக்கத்தில், நிலையியற் கட்டளை 9 இன் கீழ் செயலாளர் நாயகம் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையே கொண்டுள்ளார் என்பதுடன் அவர் சபாநாயகருக்கு பதிலீடாகக் கருதப்பட முடியாதவராவார். அரசியலமைப்பினால் சபாநாயகருக்கென தனித்துவமாக வழங்கப்பட்ட எந்தவொரு அதிகாரத்தையும் அவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் பகிரந்து கொள்ளவில்லை. அவ்வாறு பகிர்ந்து கொள்ளுதல் அரசியலமைப்பின்படி சாத்தியமானதல்ல. சபாநாயகர் பாராளுமன்றத்தின் சிருஷ்டிப்பாளர் ஆவார் என்பதுடன் அவர் பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமைத் தாங்குவார். எர்ஸ்கின் மே கூறுவதன்படி சபாநாயகர் என்பவர் ''பாராளுமன்றத்தின் அதிகாரங்கள், நடபடிமுறைகள் மற்றும் கௌரவத்தின் பிரதிநிதி'' ஆவார். சபாநாயகரின் சார்பாக எந்தவொரு அறிவித்தலையும் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் பாராளுமன்ற சபாநாயகருக்கு எந்தவொரு உறுப்புரை, விதி அல்லது ஒழுங்குவிதியினூடாக வழங்கப்படவில்லை. சபாநாயகருக்கு பதலீட்டாளராக பாராளுமன்ற செயலாளர் நாயகம் செயற்படவேண்டுமாயின் அதற்கேற்ற விதத்தில் அரசியலமைப்பு திருத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அது சட்டத்துறையின் பணியாகும். அரசியலமைப்பின் உறுப்புரை 121(1) இன் கீழ் ஜனாதிபதியினால் உச்ச நீதிமன்றத்திற்கு தெளிவு படுத்தலுக்கான ஆற்றுப்படுத்தப்படுகின்ற ஆவணத்தின் மற்றும் பிரஜையினால் உச்ச நீதிமன்றத்திற்கு செய்யப்படுகின்ற மனுவின் பிரதி என்பன பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் சபாநாயகரிற்கே அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தினை 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதியாகிய இன்று நான் வழங்குகின்றேன். இப்பிரதியினை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு அனுப்புகின்றமையினை அரசியலமைப்பின் உறுப்புரை 121(1) உடன் இணங்கி ஒழுங்கப்பட்டதாக பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளாது. இத்தீர்மானத்தின் பிரதியொன்றினை அதிமேதகு ஜனாதிபதிக்கும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும் அனுப்புமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு பணிக்கின்றேன்.''*

சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 4(ஆ) அமைச்சரவை அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய சொத்து மற்றும் கடப்பாடுகள் தொடர்பான பிரகடனங்களை சபாநாயகருக்கு செய்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றது. அதற்கமைய, மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் சபாநாயகரின் தீர்மானம் என்பனவற்றை அவதானிக்கின்றபோது சபாநாயகரின் உடைமை, காவல் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ளத்

தகவல்களை வெளியிடுவதற்கான அதிகாரத்தை எந்தவொரு சட்டத்தின்கீழும் செயலாளர் நாயகம் கொண்டிருக்கவில்லை.

**ஆணை:**

பகிரங்க அதிகார சபையின் வாதம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இது தொடர்பான பதிலிறுப்பை 10.09.2019 அன்று அல்லது அதற்கு முன்பதாக சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டாளருக்கு பணிக்கப்படுகின்றது.

மேலதிக விளக்கத்திற்காக மேன்முறையீடு 10.09.2019 வரை ஒத்திவைக்கப்படுகின்றது.

---

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (நேரடியாக) /719//2018- மேன்முறையீடானது* 10.09.2019 *அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வல்கம

**பணிப்பாளர் நாயகம்:** திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** சாமர சம்பத்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பாராளுமன்றம்

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: சாமர சம்பத், ஊடகவியலாளர்
தரிந்து ஜயவர்தன, ஊடகவியலாளர்

பகிரங்க அதிகார சபை: டிகிரி கே ஜயதிலக்க, உதவி செயலாளர் நாயகம்
பி.கே.டி.எஸ்.டபிள்யு. விஜேகுணதிலக்க

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்:**

பகிரங்க அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது பதிலில் தங்கியிருந்து, மேன்முறையீட்டாளரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக உரையாற்றிய திரு. தரிந்து ஜயவர்தன, குறிப்பிட்ட தகவல் கோரிக்கையினை மறுத்தலானது, பகிரங்க அதிகார சபை குறிப்பிட்டத் தகவல்களின் உடைமையினைக் கொண்டுள்ளதெனினும், சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகளின் பிரகடனச் சட்டத்தின் தொழிற்பாட்டினால் அத்தகவல்களின் வெளியிடுகை மட்டுப்படுத்தப்படுகின்றது என்பதனை உட்கிடையாக வெளிப்படுத்துகின்றது என சமர்ப்பித்தார். ஆகவே, கோரப்பட்டத் தகவல்கள் பகிரங்க அதிகார சபையின் காவலின்கீழ் இல்லை என்ற பகிரங்க அதிகார சபையின் தற்போதைய நிலைப்பாடு முரண்பாட்டிற்குரியதாகும் என கோரினார்.

பிரதி செயலாளர் நாயகத்தினை குறித்தளிக்கப்பட்ட அலுவலராக பாராளுமன்றம் நியமித்தமை மற்றும் பகிரங்க அதிகார சபையின் தற்போதைய சமர்ப்பிப்புக்களினால் எழுந்துள்ள முரண்பாடுகள் தொடர்பில் சட்டப்பிரச்சனையொன்று எழுந்துள்ளது.

இதற்கு பதிலிறுக்கும் முகமாக, சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 4அ இன் கீழ் மற்றும் அதற்கமைவாக, கோரப்பட்டத் தகவல்களின் பாதுகாவலினை சபாநாயகரே கொண்டுள்ளார் என பகிரங்க அதிகார சபை மீளுரைத்தது. ஆகவே, ஒரு உத்தியோகபூர்வ கோரிக்கை செயலாளர் நாயகத்திற்கு பதிலாக சபாநாயகருக்கு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின்கீழும் தங்களுடைய சொத்துக்களைப் பிரகடனப்படுத்தியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பதிவுகளைப் பேண வேண்டியக் கடப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை என செயலாளர் நாயகத்திற்கான அலுவலகம் உறுதிப்படுத்தியது. சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகம் என்பன இருவேறுபட்ட சுயாதீனமான இரு பதவிகளாகும் என்பதனை உறுதிப்படுத்திய அதேவேளை, சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரமைகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டினை அதிகளவில் கொண்டுள்ளார் என பகிரங்க அதிகார சபை கூறியது.

**ஆணை:**

இம்மேன்முறையீட்டில் ஒரு தனித்துவமான சட்டப் பிரச்சனை ஒன்று எழுந்துள்ளது. கோரப்பட்டுள்ளத் தகவலானது சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) கீழ் கோரப்பட வேண்டிய தகவலென்ற நிலைப்பாட்டினை பகிரங்க அதிகார சபை எடுத்திருந்தது. தகவலுக்கான உரிமைச் சட்டமானது தனித்து சுயாதீனமாக நிற்கக்கூடிய ஒரு உரிமையினை வழங்குகின்றது என்ற வாதத்திற்கு அப்பால், சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனச் சட்டமானது (திருத்தப்பட்டவாறு) மேன்முறையீட்டாளரினால் கோரப்பட்டதனைப் போன்று புள்ளிவிபர ரீதியானத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான

உரிமையினை வழங்கவில்லை. ஆகவே, அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மற்றும் அச்சட்டத்தின்கீழ் மேன்முறையீட்டாளருக்கு எவ்வித நிவாரணங்களும் காணப்படவில்லை.

மேலும், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்படி பிரச்சனைக்குட்படுத்தப்பட்டுள்ள பகிரங்க அதிகார சபையானது (இலங்கை பாராளுமன்றம்) செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தினை உடைமையினைக் கொண்டுள்ள அதிகார சபையின் பொருத்தமான அலுவலராக அதாவது தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலராக நியமித்துள்ளது. சபாநாயகரின் அலுவலகம் இவ் அலுவலர்கள் ஈர்க்கப்பட்டுள்ள பெயரிடப்பட்ட அலுவலகமாக அமையவில்லை.

செயலாளர் நாயகத்தின் சமர்ப்பிப்புக்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது, இவ்விரண்டு அலுவலகங்களும் (செயலாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் சபாநாயகரின் அலுவலகம்) என்பன பாராளுமன்றக் கட்டமைப்பில் முற்றிலும் வேறுபட்ட இரு அலுவலகங்களாகும் என்பதுடன் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 3 இன்படி கோரப்பட்டத் தகவல்கள் செயலாளர் நாயகத்திள் உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாட்டில் இல்லை என்பது தெரிகின்றது. அவ்வாறெனில், இங்கு, ஐயப்பாட்டிற்கு இடமற்றவகையில் ஜனநாயக செயன்முறைக்கு இன்றியமையாததாக விளங்குகின்ற இத்தகவல்களை மேன்முறையீட்டாளர் மற்றும் மேன்முறையீட்டாளரைப்போல சிந்திக்கின்ற ஏனைய பிரஜைகள் யாரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்ற கேள்வி எழுகின்றது.

மேன்முறையீட்டாளர் பதிலிறுக்கப்பட வேண்டிய ஒரு நியாயமான கோரிக்கையினை முன்வைத்துள்ளமையினால், இவ்விடயம் தொடர்பாக எழுந்துள்ள நடைமுறை சிக்கல் தொடர்பாக சபாநாயகருடன் கலந்துரையாடுமாறு பகிரங்க அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இம்மேன்முறையீடு மேலதிக விளக்கத்திற்காக 08.10.2019 அன்று ஒத்திவைக்கப்படுகின்றது.